226

முல்லை மணம்

ஓரங்க இசை நாடகம் 226

சுவாமி சுத்தானந்த பாரதியார்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

இயற்றியது

கதை விருந்து :

(தாமரைக் குளம் முதலிய கதைகள்)

இந்நூலில் 13 அரிய இனிய கதைகள் உள்ளன; அனைத்தும், தமிழரையும், தமிழ்நாட்டையும் பற்றியன. கதை இலக்கியத்தில் பிரஞ்சு, வங்கம், ஹிந்தி மொழி இலக்கியங்கள் மிகச் சிறந்தன; அவ்வம் மொழிக்குரிய மக்களின் பெருமையைத் தெள்ளிதின் விளக்குவன; அவைபோன்றே, இந்நூல் தமிழர் பெருமையை நிலைநாட்டுவது; கலை, கற்பனை, உண்மை நிகழ்ச்சி மூன்றையும் தழுவி, சுவை ததும்ப எளிய இனிய தமிழ் நடையில் இயற்றப்பெற்றது; உயரொழுக்கங் கற்பிக்கும் பல நீதிகளைக் கொண்டது.

192 பக்கங்கள் விலை ரூ. 1-12-0

அடுத்து வெளிவரும் கதைகள் :

1. கலியாணக் கதைகள்
2. வீர விருந்துக் கதைகள்
3. காலக் கண்ணாடி
4. உலக யாத்திரைக் கதைகள்
5. மோலியர் கதைகள்
6. ரஸீன் கதைகள்
7. கிரேக்க ரோமக் கதைகள்
8. வங்கக் கதைகள்
9. பெரும் புலவர் கதைகள்
10. ஞானசாகரக் கதைகள்

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம்,
திருச்சி ஜில்லா

முல்லை மணம்

ஓரங்க இசை நாடகம்

226

*

2032

894.8112

சுவாமி சுத்தானந்த பாரதியார்
இயற்றியது

8 - JUN 1942
MADRAS

*

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா

உரிமை பதிப்புற்றது] 1942 [விலை அணா 4

First Edition : March 1942

031, 2

(All Rights Reserved)

Published By

ANBU NILAYAM

Ramachandrapuram, Trichy Dt.

SADHU PRESS, MADRAS.

பதிப்புரை

"முல்லை மணம்" என்னும் இந்த இசை நாடகத்தைக் கலாதேவிக்கு அர்ப்பணிக்கிறோம். ஆங்கிலத்தில் "ஆபராக்கள்" (OPERAS) இருக்கின்றமை போல், தமிழில் இசை நாடகங்கள் உண்டாக்க வேண்டும். அவை, மிகவும் எளிய இனிய தூய நடையில், உள்ளத்தை அள்ளும் இசை நயத்துடன் அமைந்திருக்க வேண்டும்.

தமிழில் அத்தகைய முதல் நாடகம் இதுவாகும்; இது காதற் சுவை நிரம்பிய கற்பனை; உண்மைக் காதலின் இயல்பைத் தெளிவாக விளக்குவது.

இதைப்போன்ற சிறு நாடகங்கள் பல வெளியிடவுள்ளோம்; அவ்வப்போது வெளிவரும். தமிழர் அன்பும், ஆதரவும், இறைவன் அருளும், எமது அருட் பணிக்கு ஆற்றலும் வெற்றியும் அருளுக!

இந்நூல் வெளியீட்டின் முழுச் செலவையும் மகிழ்வுடன் ஏற்றுக்கொண்ட அன்புத் திருவாளர் இராயவரம் மு. ராம. சொ. அழகப்பச் செட்டியார் அவர்களுக்கு எங்கள் நன்றி உரியதாகுக!

இராமச்சந்திரபுரம்
29—3—1942

அன்பு நிலயத்தார்

எண்: ௪ அ—க—௲௫௦௦

கதைச் சுருக்கம்

மருது பாண்டியன் ஒரு சிற்றரசன். தன் வீரருடன் அவன் வேட்டையாடச் செல்லுகிருன்........ ஒரு மானைப் புலி துரத்துகிறது. அந்த மானை விடுவிக்கப் புலியைத் துரத்திக் கொல்லுகிருன்; பிறகு ஒரு அழகான சோலையில் இளைப்பாறுகிருன். அங்கு **முல்லை,** மலர் கொய்ய வருகிருள்..........அவள் பாட்டும் அழகும் மருதுவை வசீகரிக்கின்றன. முல்லையும் மருதுவைக் கண்டதும் காதல் கொள்கிருள். இருவரும் ஒரு மல்லிகைப் புதரில் சந்திக்கின்றனர். அச்சமயம் வீரர் தேடி வருகின்றனர். மருது காதலியிடம் விடைபெற்றுச் செல்லுகிருன். சேடியர் தேடி வரவே, முல்லையும் அவர்களுடன் வீட்டிற்குச் செல்லுகிருள். பெண்ணிடம் புதிய மாறுதல்கள் கண்டு, தாயார், "எங்கே பயந்தாய்... என்ன செய்தி?" என்றெல்லாம் கேட்கிருள்; கோடாங்கி பார்க்கிருள். "நான் எதற்கும் அஞ்ச மாட்டேன்........ஆனல்" என்று முல்லை நாணிக் குனிகிருள்........அச்சமயம், மருது வேட்டையாடும் சத்தம் கேட்கிறது. தாயார் உண்மையை ஊகிக்கிருள்......"கண்ணே வருந்தாதே; அவன் வருவான்" என்கிருள்........அச்சமயம் பல்லக்

குடன் மருது வந்து பெண்மானை அழைத்துச் சென்று மணம் புரிந்து இன்புறுகிருன்!

முல்லை தமிழ்நாட்டு மலர்; காதலுக்கு அறிகுறி. முல்லை முகையும் நகையும் கவிதை பெற்றவை. மருது (கிளிவளர் மருது) தமிழ் நாட்டிற்குரிய மரம். மருத மரத்தை முல்லைக்கொடி அணைகிறது. அக்காட்சியில் "**முல்லை மணம்**" எழுகின்றது.

—

நாடக பாத்திரர்

மருது	...	அரசன்
வேட்டைத்தோழர்	...	
முல்லை	...	காதலி
தோழியர்		
தாயார்		
இடம்	...	நந்தவனம் குடில் அரண்மனை

முல்லை மணம்

காப்பு

(நொண்டிச்சிந்து)

அப்பனும் அம்மையுமாய்—எண்ணில்
ஆணுடன் பெண்ணுமாய் ஆடுகின்றான்...
ஒப்பரும் பரமாத்மா—இந்த
உலகெல்லாம் அவனருட் குலவிரிவாம்...
கற்பனை வாழ்க்கையெல்லாம்—அவன்
காதலாற் புனைந்திடுங் காவியமாம்...
அற்புதச் சிற்பரனும்—அவன்
அன்பினால் எய்துவோம் இன்பமெல்லாம்.

முதற் காட்சி

[காட்டில் மருதுவும் வீரரும் வேட்டையாடுதல்.]

வீரர்

(புன்னாகவராளி—ஆதி)

வில்லை வளைத் திடுவோம்—வன
வேட்டைகள் ஆடிடுவோம்...
கல்லையும் பிளந்தெறிவோம்—சுடு
கனலெனக் கணை விடுவோம்...

8-JUN 1942

மருது

ஹா...சுட்டோம் நரியை...அதோ ஒரு புலி... துரத்துங்கள்!

பட்டது வஞ்ச நரி—ஹா
பசுவனம் கிடுகிடுக்கக்
கொட்டுங்கள் ஜயமுரசம்—அந்தக்
கொடும்புலி நடுங்கிடவே...!

வீரர்

அரசே! அந்தப் புலி ஒரு புள்ளிமானைத் துரத்தி ஓடுகிறது......

மருது

இதோ புலியைக் கொன்று மானை எனது காதலிக்குத் தருவேன்......நீங்கள் அந்த மத யானையைத் துரத்துங்கள்......!

மனமெனத் தாவுதுபார்—அந்த
மானைப் பிடித்திடுவேன்...
எனதிளங் காதலிக்கே—அதை
ஈந்து மகிழ்ந்திடுவேன்...

[மருது மானைக் காக்க ஓடுதல்.]

வீரர்

துட்ட மதக்கரியைக்—கொல்லச்
சூலத்தை வீசிடுவோம்...
கொட்டுங்கள் போர்ப்பறையை—அதன்
கோபத்தைத் தூண்டிடுங்கள்...!

துரத்து...பிடி, அடி, குத்து, வெட்டு... கொல்...வெல்...ஹோ...!

[யானை வேட்டையாடி வீரர் ஓடுதல்...]

இரண்டாங் காட்சி

[மருது புலியிடமிருந்து மானை விடுவித்து, ஓர் அழகான சோலைக்கு வந்து இளைப்பாறுதல்; மானினிடம் கொஞ்சுதல்......சோலை வனப்பை வியத்தல்.]

மருது

புலி இறந்தது ; புள்ளிமான் பிழைத்தது !
அன்பு மானே, அழகு மானே !
பிள்ளைபோல் உன்னைப் பிரியமாய் வளர்ப்பேன்...
இனிய சோலைக்கு என்னைக் கொணர்ந்தாய்
அழகு குலுங்கும் அமுதச் சோலை...
பார்க்கப் பார்க்கப் பரவச மாகிறேன்...

(நோண்டிச் சிந்து)

வன்னப் பசுஞ் சோலை—இதன்
வனப்பினில் ஆனந்தம் வளருதடா...
தின்ன ரசக் கனிகள்—இளந்
தென்றலுடன் கொஞ்சுகின்ற தேன் மலர்கள்...
அன்னக் குளத்தருகே—புட்கள்
அணியுறப் பாடிவிளை யாடும்அழகை
என்னென்று சொல்லிடுவேன்—அடடா !
இயற்கையின் இன்பமே இன்பமடா !...

[இச்சமயம் முல்லை தோழிகளுடன் வனத்தில் பூக் கொய்துகொண்டே பாடுதல்.]

முல்லை

(செஞ்சுருட்டி—ஆதி)

வனமலர் கொய்திடுவோம்—தோழிமாரே
வண்டுக ளுடன் பாடி—தோழிமாரே
இனமலர் மாலைகட்டி—தோழிமாரே
இறைவனுக் கணிசெய்வோம்—தோழிமாரே...

மல்லிகை சண்பகம் செவந்தி ரோஜா—வாச
மருவு மருக்கொழுந்து—செவ்வரளி...
முல்லை மனோரஞ்சிதம் முகைவிரிந்தே—எங்கும்
முத்துநகை குலுங்கும் வேளையிலே (வனமலர்)

[மருது பாட்டைக் கேட்டுப் பரவசமாகி வருதல்.]

மருது

ஆற்றுப் பாட்டும், காற்றுப் பாட்டும்
குருவிப் பாட்டும், குயிலின் பாட்டும்
முழங்கும் இந்த முல்லை வனத்தில்,
குயிலினும் இனிய குரலுடன் பாடும்
மயிலவள் யாரோ ! மனத்தைக் கவர்ந்தாள்...
ஆ, ஆ, வணக்கம், அழகுத் தெய்வமே !...

[முல்லையைக் கண்டு சொக்கி நிற்கிறான். முல்லையும் அவனைப் பார்க்கிறாள்.]

முல்லை

சகிகாள் ! அங்கே செவந்தியும், அரளியும் கொய்துகொண்டிருங்கள் ; குண்டு மல்லிகையைச் சேர்த்து வருகிறேன்....

தோழிகள்

சீக்கிரம் வருவாய்...

[தோழிகள் பாடிச் செல்லல்.]

காதல் வனத்தினிலே—தோழிமாரே
கண்ணன் ஒளிந்திருப்பான்—தோழிமாரே
மாதவி மலர்களால் தோழிமாரே—அவன்
மார்பை யலங்கரிப்போம்—தோழிமாரே !

மூன்றுங் காட்சி

முல்லை

இந்திரனே ராமச் சந்திரனே—அவன்
என்மனம் கொள்ளைகொள்ள—வந்தவனே...
கந்தனே கண்ணனே மன்மதனே—இந்தக்
கட்டழகன் சோம சுந்தரனே...

மருது

(நொண்டிச் சிந்து)

கண்டதும் காதல் கொண்டேன்—இந்தக்
காரிகை யேயெனக் காருயிராம்...
விண்ட முல்லை முறுவல்—கதிர்
வேலினும் வாளினும் கூர்விழிகள்
வண்டுமொய் மலர்க் கூந்தல்—திரு
வசித்திடும் பூரண மதிவதனம்...
கொண்டென துளங்கவர்ந்தாள்—இந்தக்
குணவதி தன்னையே மணம் புரிவேன்...

[கிட்ட வந்து]

மலர்ந்து மணக்கும் மல்லிகைக் கொடியே,
தனியே யிருப்பதேன்? வனசௌந் தரியே...
பவளவாய் திறந்து பைந்தமிழ் பேசாய்...

முல்லை

கொடியை விரும்பும் வீரக்கொம்பே,
அருகே வருமுன், யார்நீ சொல்லாய்!

மருது

யானே வீரத் தமிழர் அரசன்;
இந்த நாடென் சொந்த நாடு;
வேட்டை யாட வில்லுடன் வந்தேன்;

இந்தப் புள்ளிமான் இன்று கிடைத்தது...
மனத்துடன் இந்த மானையும் தருகிறேன்...
மானும் உனதே, யானும் உனதே !

முல்லை

[நாணம் மிகுந்து]

மானே வா ; என் மனத்தைக் கொண்டு தா... !

மருது

மகிழ்ந்தேன் ; மலரும் மணமும் போலே
வாழ்வோம் கண்ணே, வாரிச முகியே,
மரகதக் கிளியே, மாமரக் குயிலே,
மாசறு பொன்னே, மணியே, முத்தே... !
காத லென்னுங் கனிரசக் கட்டியே,
என்னை விரும்பினோர் எண்ணில் லாதவர்
எனக்குப் பிடித்தவர் எவரு மில்லை.
மனத்திற் கேற்ற மகராசி ஒருத்தியை
எதிர்பார்த் திருந்தேன் ; இன்றே கண்டேன் !

முல்லை

எனது காதலை இரந்தவர் எண்ணிலர்.
கண்ணெடுத் தவரைக் கண்டது மில்லை.
உள்ளங் களிக்க உண்மை வீரரை
எதிர்பார்த் திருந்தேன் ; இன்றே யடைந்தேன்.

[வருதல் வேட்டை வீரர் ; பறைகள் கொட்டிப் பாடுதல்.]

வேட்டை வீரர்

(புன்னாகவராளி—ஆதி)

கொட்டுங்கள் ஜயமுரசம்—எங்கள்
கொற்றவன் வாழ்க வென்றே...
எட்டிமுன் னேறிடுங்கள்—இசை
ஏந்தியதமிழ் மறவர்... !

மருது

வந்தார் என்றன் வன்படை வீரர்...
சென்று வருகிறேன் ; சிந்தையை உனக்கே
தந்து செல்கிறேன் ; வந்துனை மணப்பேன்...

[தோழிகள் வருதல்.]

தோழிகள்

முல்லை, முல்லை, முடிந்தது பகலே !

முல்லை

மனத்தைக் கொண்டு மணாளர் சென்று
வருக வருக மங்கல மாக... !

மருது

மங்கலங் கொண்டு வருவேன்—கிளியே... !
பிரியா மனத்துடன் பிரிந்து செல்கிறேன்...

[செல்லல். வேட்டைப் பறை முழக்கம்.]

தோழிகள்

இல்லிற் கேகுவோம் இளங்கொடி முல்லாய் !

[எல்லோரும் பாடிக்கொண்டே செல்லல்.]

எல்லோரும்

காதல் வனத்தினிலே—தோழிமாரே
கண்ணன் ஒளிந்திருந்தான்—தோழிமாரே
சோதி நகைபுரிந்தான்—தோழிமாரே—அந்தச்
சொக்கில் எனைமறந்தேன்—தோழிமாரே !

நான்காங் காட்சி

[முல்லை தனியே காதலனையே நினைத்துப் புலம்புகிருள்.]

முல்லை

ஆ, அவர் ஒருவரின்றி உலகமே எனக்கு வெறுமையா யிருக்கிறதே!

(பியாகு—ரூபகம்)

இன்று வருவாரோ—இனி
என்று வருவாரோ...
ஒன்றுந் தெரியலையே—என்
உள்ளம் பதறுதம்மா!

சோறு பிடிக்கவில்லை—எனக்குத்
தூக்கம் பிடிக்கவில்லை.
ஆறு மலைவனமும்—எனக்கோர்
ஆறுத லாகவில்லை...!

முல்லைக் குறும்புநகை—என்னை
முள்ளெனக் குத்துதம்மா—அந்த
அல்லிக் குளத்தென்றல்—நெருப்பை
அள்ளி வீசுதம்மா...!

கூட்டம் பிடிக்கவில்லை—சும்மா
குந்தப் பிடிக்கவில்லை...!
பாட்டுங் கசந்ததம்மா—திரட்டுப்
பாலும் புளித்ததம்மா!

மெல்லிய யாழினிலும்—ஒரு
வெறுப்புத் தோன்றுதம்மா!
புல்லாங்குழலினிலும்—ஒரு
புளிப்புத் தட்டுதம்மா!

வேட்டைக்கு வந்தவன்போல்—வலை
வீசியென்னைப் பிடித்தான்...!
தீட்டிய வெங்கணைகள்—இந்தத்
திங்களும் பாய்ச்சுதம்மா...!

[மகள் நிலையைக் கண்டு தாயார் கவலையுடன் கேட்டல்.]

தாய்

மகளே, உனக்கு என்ன நேர்ந்ததடி? ஏனிப்படியிருக்கிறாய்?

(சேஞ்சுருட்டி—ஆதி)

பித்துப் பிடித்ததுபோல்—தங்கமே தங்கம்
பிதற்றி வருந்துகின்றாய்—தங்கமே தங்கம்...
முத்து முறுவலின்றித் தங்கமே தங்கம்
முகமலர் வாடியதேன்—தங்கமே தங்கம்...
பங்கய மேனியிலே—தங்கமே தங்கம்
பசலை படர்ந்ததடீ தங்கமே தங்கம்...
செங்கை வளைதளரத் தங்கமே தங்கம்
தேகம் மெலிந்ததேனோ—தங்கமே தங்கம்?

முல்லை

சும்மா போ, அம்மா........எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை......

தாய்

செள்ளென விழுகாதே—தங்கமே தங்கம்
செய்தியை மறைக்காதே—தங்கமே தங்கம்
உள்ளத்தில் உள்ளதெல்லாம் தங்கமே தங்கம்
உன்முகங் காட்டுதடீ—தங்கமே தங்கம்
கொங்கை வெதும்புதடீ—தங்கமே தங்கம்—உன்
குணமும் திரிந்ததடீ—தங்கமே தங்கம்...
எங்கே பயந்துகொண்டாய்?—தங்கமே தங்கம்—அங்கே
என்ன நடந்ததடீ—தங்கமே தங்கம்?

முல்லை

சொல்லத் தெரியலையே—அதற்கொரு
சொல்லும் உலகிலில்லை
மெல்லத் தெரியலையே—மன
வேதனை பொல்லதம்மா!

தாய்

சொல்லடீ கண்மணியே, சோகை பிடித்ததுபோல்
மூஞ்சி வெளுத்தாய்நீ, மூச்செறிந்து விம்முகிருய்;
கொங்கை பசந்தாய், குமுதக்கண் பஞ்சடைந்தாய்;
எங்கே பயந்தாய்? இளமானே சொல்லடியோ...

முல்லை

வீர மறக்குலத்தில்—வந்த
வில்விழி யானல்லனே—என்
பேரினைக் கேட்டாலும்—வனப்
பேயும் பயப்படுமே...!

பூப்பறிக் கும்கரத்தால்—வேங்கைப்
புலிப்பல் லும்பறிப்பேன்
ஆப்பைப்பிடிக் குங்கையால்—வேல்
ஆயுதமும் பிடிப்பேன்

துச்சமாய் எண்ணிவிட்டாய்—ஒரு
சூரத் தமிழ்மகளை...
அச்சமென் னும் பேச்சே—எனக்
காகாத வார்த்தையம்மா...!

தாய்

பின்னே யென்னடி? பேசாய் கண்ணே,...
நான் வளர்த்த நறுமண முல்லையே!
ஏன் உடல் இளைத்தாய்? என்னவுன் வருத்தம்?...
யாரோ உன்னை என்னவோ செய்தார்...
கள்ள மின்றி உள்ளதைச் சொல்லடீ...

[இச்சமயம் வேட்டை முரசு கேட்கிறது...
முன்பாடிய பாட்டையே தூர இருந்து பாடு
வதுபோல் பாடிப் பறை முழக்கவேண்டும்.]

முல்லை

முரசு செய்யும் முழக்கங் கேளாய்... !

தாய்

அரசு கொட்டும் முரசம் அதுவே :
தன்னுயிர் போலத் தருமம் போற்றி
மன்னுயிர் காக்கும் மருது பாண்டியன்
வேட்டை யாடக் காட்டிற்கு வந்தான்...
அவன்மேல் உன்றன் ஆசை சென்றதோ ?
அப்படி யிருக்குமோ... ? செப்படி உண்மை... !

முல்லை

அதுதான் அம்மா அமைதியாய்க் கேளாய் :
மல்லிகை பறித்து மடியில் சேர்த்தேன்...
அப்போ தங்கே அழகன் வந்தான்...
ஆண்மையே வடிவம், அன்பே உள்ளம்... !

(வராளி—சாப்பு)

தோளுயர் வீரகம் பீரனே—பால
சூரியன் போல முகத்தனே ;
வேளும் வியக்கும் அழகனே—நல்ல
வித்தையும் சொத்தும் உடையவன்...
ஆளுக்குத் தக்க சமர்த்தனே—நெஞ்சில்
அன்பு மிகக் கொண்டான் என்னிடம்...
வாளுயர் கீர்த்தி மிகுந்தவன்—என்
வாள்விழிக் கன்று வணங்கினான்...

தாய்

அறிந்தேன், அறிந்தேன், அருமை மகளே...
மல்லிகைக் கொடிக்கு மாமரம் கிடைத்தது...
குவளை மகிழக் குளிர்மதி வந்தான்...
கமலம் பூக்கக் கதிர்மணி வந்தான்... !

முல்லை

அம்மா, மனத்தை அள்ளிச் சென்றவர்
வருவரோ சொல்லாய் ?

தாய்

வருவார் கண்ணே... !
தூது விடுத்துச் சொல்வன சொல்வேன்.

[முரசொலி அருகே கேட்கிறது. வீரருடன்
மருது வருகிறான்.]

தாய்

வருக வருக, மன்னவா வருக... !

மருது

சிவிகை கொண்டு சேமமாய் வந்தேன்...
மங்கலஞ் சொல்ல மகிழ்வுடன் வந்தேன்.

தாய்

என்மகள் உம்மை எதிர்பார்த் திருந்தாள்...
முல்லையின் காதலுக் கெல்லையே யில்லை... !
செய்தி யறிந்தேன்...சிந்தை குளிர்ந்தேன்.
நான்பெற் றெடுத்த மான்விழி முல்லை,
இந்த நாட்டின் இறைவ ருக்கே
பட்ட மகிஷியாம் பாக்கியம் பெற்றாள்... !

மருது

பல்லக் கேறிப் பட்டணம் சென்று
திருமணம் புரிந்தென் சிங்கா தனத்தில்,
இலங்குக முல்லை இறைவி யாகவே !

வீரர்

அரசன் விரும்பும் அரசி வாழ்கவே !
காதலும் வீரமுங் கலந்து வாழ்கவே !

தாய்

(புன்னாகவராளி—திஸ்ரஏகம்)

பத்தரை மாற்றுத்தங்கம்—என்
பத்மினிச் சாதி மகள்...
உத்தமப் பெண்ணரசி—ஐயா
உனக்கேற்ற பொன்னரசி...

சத்திய நெஞ்சுடையாள்—என்றுந்
தளராத கற்புடையாள்
சித்திரங் கண்டறியா—நல்ல
செந்திருப் பொற்புடையாள்...

அமுதம் பழித்த மொழி—ராஜ
ஹம்ஸம் பழித்த நடை
குமுதம் பழித்த விழி—பாற்
குடம்போன்ற மார்புடையாள்...

பாடினால் வீணையென்பாய்—பசும்
பாலுடன் சீனியும்போல்
கூடினால் சொர்க்க மென்பாய்—பக்கங்
குந்தினால் மோட்ச மென்பாய் !

கண்டால் மனஞ் சிலிர்க்கும்—அவள்
கனிவாய் நகையமுதை...
உண்டால் உயிர்சிலிர்க்கும்—அவள்
உரைத்தால் உளங்குளிரும்...

நான்பெற்ற பூங்குயிலை—ஒயில்
நடனப் பசுமயிலை
தேன்பெற்ற கிஞ்சுகத்தை—இந்தத்
தென்மொழிக் கற்பகத்தை

செல்லமாக வளர்த்தேன்—மிகச்
சீராட்டி யன்புசெய்தேன்
நல்ல பட்சமுடனே—நீ
நடத்தவேண்டுந் துரையே...

மருது

கொள்ளக் கிடைக்காத—இந்தக்
குமுத மதிமுகத்தாள்
விள்ள முடியாத—இன்ப
வெறிதந்து வென்றுவிட்டாள்.

மாருத காதலினால்—எங்கள்
மனமுயிர் ஒன்றியபின்
பேராத கற்புடனே—மிகப்
பிரியமாய் வாழ்ந்திடுவோம்.

அறம்பொருள் இன்பமுடன்—திரு
வருள்தரு வாய்மையுடன்
திறம்பாத நீதியுடன்—நாங்கள்
சேமமாய் வாழ்ந்திடுவோம்.

பூப்போலே வைத்திருப்பேன்—உன்
பொன்னான கண்மணியை
தாய்ப் பாச நெஞ்சார—ஆசி
தந்து விடைகொடுப்பாய் !

தாய்

கண்ணும் ! கருமணியும்—வீசுங்
கதிரும் கதிரவனும்,
பண்ணும் பனுவலும்போல்—நல்ல
பாட்டும் பரதமும்போல்

பயிரும் நிலமும்போல்—கூடும்
பரமும் இகமும்போல்
உயிரும் உடலும்போல்—நீங்கள்
ஒன்றாக வாழியவே !—மிக
நன்றாக வாழியவே !

பார்த்து மனங்குளிர்ந்தேன்—உங்கள்
பக்குவக் காதலெல்லாம்
தீர்க்காயுள் பெற்றிருப்பீர்—இனிச்
சேமமாய்ப் போய்வருவீர்... !

முல்லை

பெற்று வளர்த்தவளே—உன்னைப்
பிரியமன மில்லையே
ஒட்டுற வாயிருப்போம்—நீயும்
உடனே உடன்வருவாய் !

மருது

மகளுக்கு நல்லதுணை—என்
மனைக்கும் பெரிய துணை
சுகமாக வாழ்ந்திடலாம்—அம்மா
சுபமாகப் பின்வருவாய்...!

தாய்

வருகிறேன் மகளே, வருகிறேன் அரசே!
உன்மனை வாழ்விற் குதவியாக
என்மக ளுடனே இறுதி நாளை
நல்ல போதாய் நான்செல விடவே
வருகிறேன் கண்ணே! வருகிறேன் அரசே!

எல்லோரும்

மங்கலம் பொங்குக! மங்கலம் பொங்குக!

[பல்லக்குச் செல்லும் சத்தம்: "ஏலேலம் ஏலம் ஏக்கம்......ஏகம் ஏலோலம்"]

ஐந்தாங் காட்சி

[மருதும் முல்லையும் திருமணக் கோலத்துடன் விளங்குதல். எல்லாரும் மங்களம் பாடுதல்.]

பொலிக பொலிக பொலிக பொலிகவே
    பொங்கும் இன்பம் எங்கும் பொலிகவே !
நலிக நலிக தீதும் அச்சமும் ;
    நலங்கள் யாவுந் துலங்கி வாழ்கவே...
பொழிக பொழிக பூரணக் கதிர்...
    புதிய புதிய போகம் ஓங்கவே...
அழிக துன்பம் ஆர்வக் காதலர்...
    அறமும் அன்பும் சிறந்து வாழ்கவே !

ஆறுங் காட்சி

காதலர் இன்பம்

[மருதும் முல்லையும் உல்லாச வனத்தில், ஒரு கொடி வீட்டில் இன்பமா யிருக்கின்றனர்.]

மருது

பொன்னும் மணியும் புவிதரும் இன்பமும்
உன்முன் என்னும் ! உயிருக் குயிரே !

முல்லை

நீயே என்னுயிர், நானுன் உடலே
நீயே என்கதிர், நானுன் கண்ணே
நீயென் உள்ளம் ; நானுன் காதல் !

மருது

(காபி—ஆதி)

கடலுக்கும் எல்லையுண்டு—என்
காதலுக் கெல்லையொன் றில்லையடீ—கண்ணே...

முல்லை

உடலுக்கிங் கெல்லையுண்டு—என்
உள்ளத்திற் கெல்லையொன் றில்லையடா—கண்ணு

மருது

ஞான முதிக்குதடீ—நீயும்
நானும்ஒன் ருகிய மோனத்திலே—கண்ணே

முல்லை

வானத்திற் கெல்லையுண்டு—நம்
வாழ்வினுக் கெல்லையொன் றில்லையடா—கண்ணு

மருது

காதலர் உள்ளத்திலே—அந்த
காரம் விலக்குமோர் காந்த விளக்குண்டு...

முல்லை

மோதும் புயலிருளை—அது
முத்தமிட் டுண்ணமுன் னேறிடுவோம் கண்ணு !

[வருதல் ஆடற் பெண்கள்]

மருது

கண்ணே, மனது களிக்கச் சற்றே
பாட்டுக் கேட்போம் ; ஆட்டம் பார்ப்போம்.
ஆடற் பெண்காள், அழகு மயில்காள்,
இன்பத் தமிழால் இசைநடம் புரிவீர் !

[இசைப் பெண்கள் பாடி யாடுதல்]

ஆடற் பெண்கள்

(குறவஞ்சி மெட்டு)

கத்துகுயில் ஓசையுண்டு
கான மயில் உண்டு
எத்திசையும் கலை மயக்கில்
இன்பவெறி கொள்வோம்.

ஆனந்தமே வாழ்க்கை யென்றார்
அறிவறிந்த பெரியார்
கானரசக் கனவினிலே
கவலைகளை மறப்போம்.

குருவியுடன் அருவியுடன்
குழல்வீணை யுடனே
மருவியிளங் காதலர்கள்
மங்கலப்பண் ணிசைப்போம்.

அலைகளுடன் ஆடிவரும்
அமுதநிலாப் போலே
கலைகளுடன் கலந்திருப்பார்
காலனையேன் மதிப்பார் ?

அன்புடனே மனங் கலந்தால்
அச்சமில்லை யுலகில்
துன்பமில்லை தோல்வியில்லை
சுதந்தரப்பாட் டொலிப்போம்.

காவியமும் ஓவியமும்
கதையரங்கும் காண்போம் ;
பூவிலுறை வண்டெனவே
பூமியிலே வாழ்வோம்.

தென்றல் வந்து கொஞ்சுகின்ற
தேமலர்ச் சோலையிலே,
மன்றல் கொண்ட காதலர்கள்,
மகிழ்ந்து நடம்புரிவோம்.

எண்காணு இயலழகில்
இன்பவெறி கொண்டால்,
கண்காணுக் கடவுளையும்
காதலிலே பிடிப்போம் !

எல்லோரும்

காதல் வாழ்க ! காதலர் வாழ்க !

முல்லை மணம் முற்றிற்று

சுவாமி சுத்தானந்த பாரதியார்
இயற்றியது

(கம்பன் கலை நாடகம்)

ஸ்ரீ ராமதூதன்

"கம்பன் கவிதையைக் கலக்கிக் குடித்துக் களித்தாடும் கூத்தே இந்நாடகம்; கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம் - இரண்டையும் தழுவி எழுதப் பட்டது; இடையிடையே கம்பன் செய்யுட்களும் இசை கலந்து பாடவேண்டி ராக தாளங்களுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியர் தமக்கேற்ற உயிருள்ள ஆவேசத் தமிழ் நடையில், தெளிவும், எளிமையும், இனிமையும் வாய்ப்ப, பாத்திரங்களின் உள்ளக் கிடக்கைகளைத் தெள்ளி வாங்கி அள்ளி வழங்குகிறார். இந்நாடகத்தைப் படித்து இன்புறவேண்டியது தமிழர் கடமையாகும்."

வித்துவான் - ஜி. சுப்பிரமணிய பிள்ளை, M.A., B.L.
(தமிழ் ஆராய்ச்சி விரிவுரையாளர்,
அண்ணாமலைச் சர்வகலாசாலை)

விலை ரூ. 1-0-0

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம்,
திருச்சி ஜில்லா

2032